**மேல் மாகாண சபை - 2017**

-----------------------------------------------------------

மேல் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின்

வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 02. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மேல் மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2018 மார்ச் 09 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 ஏனைய கணக்குகள்**

2018 யூலை 15 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | | 2017 ஆம் ஆண்டிற்கானது | |
|---|---|---|---|
| | | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 |
| (ii) | வருமானக் கணக்குகள் | 30 | 30 |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 27 | 27 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 02 | 02 |
| (v) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 05 | 05 |
| (vi) | நிதியக் கணக்குகள் | 07 | 07 |
| (vii) | நியதிச்சட்டக் கணக்குகள் | 09 | 09 |
| | **மொத்தம்** | 107 | 107 |

**2.2.3 கணக்கீட்டு கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் நிலுவை வருமானங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் வருமானக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 2,596,501,783 பெறுமதியான நிலுவை வருமானங்கள் காணப்பட்டன.

**2.2.4 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை**

மாகாண சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் காட்டப்பட்டிருக்காததுடன் அச் சொத்துக்கள் காணப்படுகின்றதென நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 7,331,920,643 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மாகாண சபையால் உரித்தாக்கப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 நிதியேற்பாடுகளின் முகாமைத்துவம்

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 11 செலவினத் தலைப்புக்களின் கீழ் 19 சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 209,011,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 22 செலவினத் தலைப்புக்களில் 71 சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீண்டெழும் நிதி ஏற்பாடுகளில் 50 சதவீதத்தினை விஞ்சிய சேமிப்புக்கள் ரூபா 4,213,047,292 தொகை ஆகும்.

(இ) மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் 14 விடயங்கள் தொடர்பாக ஆண்டின் ஆகக் கூடிய செலவின எல்லை ரூபா 1,054,329,000 கூட்டுமொத்த தொகையாக இருந்ததுடன் அவற்றில் 10 சதவீதத்திற்கும் 77 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் ரூபா 349,595,077 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக்கூடிய எல்லை யதார்த்தமானதாக இருக்கவில்லை.

(ஈ) மாகாண சபை உறுப்பினர்களிற்கு மோட்டார் வாகனங்களை வழங்கும் போது வழங்கப்படும் கடன்கள் தொடர்பான 10104 முற்பணக் கணக்கிற்காக ரூபா 3,000,000 தொகையான ஆகக் கூடிய செலவின எல்லை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 109,006 அதாவது 3.6 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக்கூடிய எல்லை யதார்த்தமானதாக இருக்கவில்லை.

### 2.2.6 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள கட்டுநிதிக் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மாகாண சபையில் ரூபா 606,458,988 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சித் திணைக்களத்திற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கிலுள்ள முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகளிற்கான கட்டப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு அறிக்கையில் காட்டப்பட்ட பொது வைப்புக்களிற்கும்

நிதியக் கணக்கில் காட்டப்பட்ட பொது வைப்புக்களிற்கும் இடையே மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளில் ரூபா 6,121,458 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**2.2.7 கட்டுநிதிக் கணக்கு**

மாகாண திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சுகாதார திணைக்களத்திற்குரிய தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 758,868,879 கூட்டுமொத்தமாகும்.

**2.2.8 முற்பணக் கணக்குகள்**

மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான 27 முற்பணக் கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 297,985,694 ஆகும். அவற்றில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 219,550,576 ஆகும்.

**2.2.9 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

04 நிறுவனங்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட காலங்கடந்த வைப்புக்களின் மீதி ரூபா 8,876,031 தொகை ஆகும்.

**2.2.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 2018 யூலை 16 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை | செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் பெறப்பட்ட மோட்டார் வாகனங்கள் மாதாந்தம் ஆகக் குறைந்தது 3,000 கிலோமீற்றர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மாகாண கல்வி அமைச்சின் 05 மோட்டார் வாகனங்கள் 06 மாத காலப்பகுதியின் போது 23,882 கிலோமீற்றர்களும் |

| | |
|---|---|
| | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வாகனமொன்று 06 மாத காலப்பகுதியின் போது 13,517 கிலோமீற்றர்களும் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்காததனால் அரசாங்கத்திற்கு முறையே ரூபா 1,187,859 மற்றும் ரூபா 741,182 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) 2015 சனவரி 29 ஆம் திகதிய கல்வி அமைச்சுச் செயலாளரின் 05/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தின் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 1,489,890 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 300,000 தொகை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,189,890 மிகுதி தொகை சுற்றறிக்கைக்கு முரணாக செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) 2016 யூலை 05 ஆம் திகதிய 12/2016 ஆம் இலக்க மேல் மாகாண சபை நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | குழாம் வாகனங்களிற்காக மோட்டார் கார்கள் ஈடுபடுத்தப்பட முடியாத போதிலும் கல்வி அமைச்சினால் செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் காரொன்று குழாம் வாகனத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) மேல் மாகாண சபை நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) ஒழுங்குவிதி 283.4 | மாகாண கல்வி அமைச்சிற்குரிய வங்கிக் கணக்கொன்றிலிருந்து வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ஆறு மாதங்களிற்கு மேற்பட்ட ரூபா 407,120 பெறுமதியான 81 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) ஒழுங்குவிதி 560 — கல்வி அமைச்சிற்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்காததுடன் மீரிகம ஆதார வைத்தியசாலை தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. வருமான முகாமைத்துவம்

### 3.1 மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்குரிய மாகாண சபையின் மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | மதிப்பிடப்பட்ட வருமானம் | | உள்ளபடியான வருமானம் | |
|---|---|---|---|---|
| | வரி வருமானம் | வரியல்லா வருமானம் | வரி வருமானம் | வரியல்லா வருமானம் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 2017 | 39,661 | 3,318 | 40,544 | 3,954 |
| 2016 | 35,544 | 2,921 | 37,394 | 3,809 |
| 2015 | 33,130 | 2,760 | 31,540 | 3,269 |
| 2014 | 28,285 | 2,992 | 28,113 | 2,979 |
| 2013 | 27,302 | 2,815 | 22,262 | 3,259 |

### 3.2 வருமானக் குறியீட்டு இலக்கம் 10-03-07-10

06 பிரதேச செயலகங்களிற்குரிய 15 தனிநபர்கள்/ நிறுவனங்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய அடகுபிடித்தல் உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 235,768 தொகை ஆகும்.

### 3.3 வருமானக் குறியீட்டு இலக்கம் 20-02-01-01

பிரதம செயலாளர் அலுவலகம் மற்றும் வளல்லாவிட்ட பிரதேச செயலகம் தொடர்பாக 03 வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து காணப்படுகின்ற நிலுவை கட்டிட வாடகை ரூபா 515,550 கூட்டுமொத்தத் தொகையாகும்.

**3.4 வருமானக் குறியீட்டு இலக்கம் 10-02-04-03**

ஜாஎல பிரதேச செயலகத்தின் நபரொருவரிற்குச் சொந்தமான 02 கள்ளுத் தவறணைகளின் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிற்காக ரூபா 773,153 தொகையான நிலுவை வருமானம் காணப்பட்டது.

**3.5 வருமானக் குறியீட்டு இலக்கம் 10-02-04-05**

04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 12 நிறுவனங்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மதுபான வரி உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 1,230,000 தொகை ஆகும்.

**3.6 வருமானக் குறியீட்டு இலக்கம் 20-02-01-03**

(அ) 12 பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 207 நிறுவனங்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீண்ட கால காணி வரிகள் ரூபா 16,979,455 தொகை ஆகும்.

(ஆ) ராகம நீர் வழங்கல் திட்டத்தின் 0.4225 ஹெக்டெயர் பரப்பளவான காணி 11 ஆண்டு காலப்பகுதியிலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் வரி வருமானம் எதுவும் மாகாண சபையால் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வத்தளை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 171 பீ ஆம் இலக்க பளகல கிராம உத்தியோகத்தர் பிரிவின் திக்கோவிட்ட கிராமத்திலுள்ள 4 ஏக்கர்கள் 1 றூட் 18 பேர்ச்கள் (698 பேர்ச்கள்) அண்ணளவான பரப்பளவுடைய அரசாங்க காணித் துண்டொன்று 1997 யூலை 31 இல் விவசாய நடவடிக்கைக்காக தனியார் தரப்பினர் ஒருவரிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 1995 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 140,000 வருடாந்த நிபந்தனை வரி அறவிடப்படாததன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 6,830,950 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ii) உரிய காணி வணிக நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததென வெளிப்படுத்தப்பட்டதன் காரணமாக குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு 2002 யூன் மாதத்தில் பிரதேச செயலாளரிற்கு பணிப்புரை வழங்கப்பட்ட போதிலும் அப் பணிப்புரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டின் போது 10 ஆண்டு காலப்பகுதிக்காக மேற்படி காணியின் 550 பேர்ச்கள் குத்தகைக்குப் பெற்றவரால் உபகுத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் மிகுதி 148 பேர்ச்கள் காணியில் 03 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு குடியிருப்பதற்காக உரித்து கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் காணிப் பிரச்சனையை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 401,630,872 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,597,241,876 ஆக இருந்தது.

### 4.2 நிதிக் கட்டுப்பாடு

சபையின் மிகை நிதி குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அம் முதலீடு ரூபா 6,750,000,000 தொகையாகும். இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு சபையின் 09 அதிகாரசபைகள் மற்றும் ஏனைய நிதியங்களிலுள்ள முதலீடுகளின் பெறுமதி ரூபா 830,529,498 ஆக இருந்தது.

### 4.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் உரிய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | முரண் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | முரண் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| **வருமானம்** | | | | | | |
| வரி | 39,661 | 40,544 | 883 | 35,544 | 37,394 | 1,850 |
| வரியல்லாதவை | 3,318 | 3,954 | 636 | 2,921 | 3,809 | 888 |
| அரசாங்க மானியம் மற்றும் சேமிப்புக்கள் | 22,406 | 18,085 | (4,321) | 36,930 | 24,102 | (12,828) |
| **Total** | **65,385** | **62,583** | **(2,802)** | **75,395** | **65,305** | **(10,090)** |
| **செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 34,051 | 33,929 | 122 | 36,722 | 34,038 | 2,684 |
| ஏனைய மீண்டுவருபவை | 20,336 | 18,722 | 1,614 | 23,754 | 20,287 | 3,467 |
| | 54,387 | 52,651 | 1,736 | 60,476 | 54,325 | 6,151 |
| மூலதனம் | 14,748 | 9,530 | 5,218 | 14,918 | 7,382 | 7,536 |
| **மொத்தம்** | **69,135** | **62,181** | **6,954** | **75,394** | **61,707** | **13,687** |

மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினம் என்பவற்றிற்கிடையேயான விகிதம் 6:1 ஆக இருந்தது.

## 05. நியதிச்சட்ட கணக்குகள் மற்றும் நிதியக் கணக்குகள்

### 5.1 பொருளாதார மேம்பாட்டு பணியகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொழிலாளர் விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் ஊழியரொருவரின் சேவை 24 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்தால் அதன் பின்னர் அவ் ஊழியரிற்கு ஓய்வுக் காலப்பகுதி வழங்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைக்குட்படுத்திய போது 2017 நவம்பர் மாதத்தின் போது பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரின் சேவை

மாதம் முழுவதும் தொடர்ச்சியாக பெறப்பட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால் உயர் தரமான பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்வதில் நிறுவனத்தின் நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது என்பது பிரச்சனைக்குரிய விடயம் ஒன்றாக உள்ளது.

(ஆ) சம்பளம் மற்றும் படிகளிற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக வெஸ்புரோ பாதுகாப்புச் சேவையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரிற்கு ரூபா 210,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 1999 பெப்ரவரி 26 ஆம் திகதிய 02/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவையின் செயலாளர்களிற்கு மாத்திரம் கைத்தொலைபேசிகள் வழங்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக ரூபா 543,810 பெறுமதியான 04 கைத்தொலைபேசிகள் பணியகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) பணியகத்திற்குச் சொந்தமான 04 மோட்டார் வாகனங்களிற்கான பராமரிப்புச் செலவினத் தொகை ஆண்டொன்றிற்கு ரூபா 1 மில்லியனிற்கு மேற்பட்டிருந்தது. கடந்த 05 ஆண்டுகளின் போது மோட்டார் வாகன பராமரிப்புச் செலவினம் ரூபா 7,021,485 ஆக இருந்தது.

(உ) பணியகத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட இணைத்தல் கற்கள் (interlock stones) இடுதல் செயற்திட்டம் தொடர்பாக ரூபா 1,552,414 தொகையான நான்கு கடன்பட்டோர் மீதிகள் 2014 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை நிலுவையாக உள்ளது.

(ஊ) பணியக நியதிச்சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு, அங்கீகரிப்பதற்கு மற்றும் கட்டணங்களை அறவிடுவதற்கு உரிய விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முன்னைய ஆண்டில் பெறப்பட்ட மூலதன மானியங்களிலிருந்து ரூபா 26,442,557 ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செலவிடப்படாத மூலதன மானியம் ரூபா 8,769,154 தொகையாக காணப்பட்டது.

(ஏ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் நடைமுறைக் கணக்குகளில் ரூபா 21,029,155 தொகை காணப்பட்டது. இதனால் ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றில் முதலீடு செய்வதிலிருந்து உழைக்கப்படக் கூடிய குறிப்பிடத்தக்களவு வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

## 5.2 கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையிடமிருந்து சம்பளங்கள் செலுத்தப்பட்ட சட்ட உத்தியோகத்தரொருவர் அதிகாரசபையில் பணியாற்றியிருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் தனியார் சட்டத்தரணியொருவரிற்கு சட்டக் கட்டணங்களாக முறையே ரூபா 701,328 மற்றும் ரூபா 1,252,184 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 5 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்காத ரூபா 35,790,333 பெறுமதியான 14 கடன்பட்டோர் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் அம் மீதிகளை அறவீடு செய்வதற்கு அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

---

### 5.3.1 ஒப்பந்ததாரர்களிற்கு தார் வழங்குதல்

---

செயற்திட்டங்களிலிருந்து அறவிடுவதன் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை 16 ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 1,855,935,254 ஆக கணிப்பீடு செய்யப்பட்ட கிரயத்திலான தாரை அதிகாரசபை வழங்கியிருந்தது. ஒவ்வொரு ஒப்பந்ததாரருக்கும் தாரை வழங்கும் போது எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டோ அல்லது முற்பண பிணைமுறி பெறப்பட்டோ இருக்காததுடன் அது தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்கொன்றோ அல்லது பதிவேடொன்றோ காணப்பட்டிருக்கவில்லை. 2018 ஏப்ரல் 10 வரை 05 ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தாரின் பெறுமதி ரூபா 30,668,810 தொகையானதுடன் அவ் ஒப்பந்ததாரர்களில் 02 ஒப்பந்ததாரர்களிடமிருந்து மாத்திரம் ரூபா 30,597,427 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் காலத்தால் குறைக்கப்பட்டு தாரைப் பெற்றிருந்த ஒப்பந்ததாரர்களிற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருக்காததால் வழங்கப்பட்ட தாரிற்கான பணத்தை அறவீடு செய்வதில் ஆபத்துக் காணப்பட்டது.

### 5.3.2 மாகாண சபைக்கு வெளியே மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்

---

(அ) செயற்திட்ட அதிகாரி அல்லது அமுல்ப்படுத்தும் அதிகாரியால் மாகாண சபையின் வெளிநிறுவனங்களிற்கு சேவைகளை வழங்கும் போது அல்லது மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மாகாண நிதி ஒழுங்குவிதி 429.3 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தொகையில் 5 சதவீதம் மாகாண சபைக்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்குரிய முறையே ரூபா 2,327,913,340 மற்றும் ரூபா 1,798,170,038 செயற்திட்ட தொகைகளில் 5 சதவீதமான முறையே ரூபா 116,395,667 மற்றும் ரூபா 89,908,501 தொகைகள் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண நிதி ஒழுங்குவிதி 429.4(அ) இன் பிரகாரம் வெளிச் செயற்திட்டங்களிற்காக மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் முழுவதும் முற்பணமாக வைப்புச் செய்யப்படும் வரை வேலை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாததுடன் பகுதிக் கொடுப்பனவுகளிற்காக அல்லது ஏதாவது மாற்றங்களை மேற்கொள்வதற்கு வேண்டுகோளொன்று பெறப்பட்டால் அவ் வேண்டுகோளிற்காக பிரதம செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 04 வெளிச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 2,327,913,340 மதிப்பிடப்பட்ட தொகையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டமைக்காக அத்தகைய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3.3 நிலுவை வருமானங்கள்

---

மாகாண நிதி ஒழுங்குவிதி 116.1 இன் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளிலிருந்தோ அல்லது ஏனைய வழிகளிலிருந்தோ நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான மொத்த நிலுவை வருமானம் ரூபா 45,847,241 தொகையாக இருந்தது.

### 5.3.4 வீதி அபிவிருத்தி நிதியம்

---

2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய மாகாண பொதுக் கணக்குகள் குழுவின் நெறிப்படுத்தலின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம் மூலதன ஒதுக்கங்களாக பெயரிடப்பட்ட கணக்கொன்று உருவாக்கப்பட்டு நிதியக் கணக்குகளில் காணப்படுகின்ற மிகை நிதிகள் அக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் மிகை நிதிகளை பயன்படுத்தி ரூபா 182,465,000

மதிப்பிடப்பட்ட தொகையொன்றிலிருந்து 2015 ஆம் ஆண்டில் 41 செயற்திட்டங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் கணக்கின் மிகுதிப் பணத்தில் ரூபா 370,171,428 தொகை மூலதன ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. இதில் ஏனைய மூலங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,157,625,144 தொகை 2016 ஆம் ஆண்டில் மூலதன ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததனால் செயற்திட்டங்களிலிருந்து உழைக்கப்பட்ட இலாபம் வருமானச் செலவினக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. இதனால் எதிர்காலத்தில் வருமான வரிக்காக பயன்படுத்தப்படுகின்ற இலாபமும் நீக்கப்பட்டிருந்தது.

### 5.3.5 தார் விநியோக பெறுகை செயன்முறை

ஹொரண (வகவத்த) அஸ்பால்ற் தொழிற்சாலைக்காக 60/70 தரத்தில் 1000 மெற்றிக் தொன் (1,000,000 கிலோகிராம்) தாரை 01 லீற்றர்/ 01 கிலோகிராம் ரூபா 49.48 விலைவீதத்தில் கொள்வனவு செய்வதற்காக 2016 நவம்பர் 22 இல் தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் விநியோகக் காலப்பகுதி 2016 நவம்பர் 15 தொடக்கம் 2017 ஏப்ரல் 15 வரையாக காணப்பட்டது. பின்னர் 2017 மே 15 வரை அலகு ஒன்றிற்கான விலைவீதம் ரூபா 52.48 ஆக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 நவம்பர் 21 தொடக்கம் 2017 சனவரி 06 வரையான காலப்பகுதிக்காக இப் பெறுகை தொடர்பாக 423.23 கிலோகிராம் தார் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் தாரை விநியோகிக்க முடியாதுள்ளதென 2017 சனவரி 10 இல் கம்பனி அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் 2017 யூலை 19 வரை ரூபா 4,948,000 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக இக் கம்பனியை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அனைத்துக் கொடுப்பனவுகளும் கொமர்ஷல் வங்கிக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் கொமர்ஷல் வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றல் பிணைமுறி வழங்கப்பட்டிருந்ததால் பிணைமுறியை காசாக்குவதில் ஆபத்துக் காணப்படுகின்றது.

(ஈ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலைகளுடன் முரண்பட்ட கேள்வி விலையின் பிரகாரம் விலைச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் என

இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கேள்வி நிபந்தனைகளிலும் உட்பிரிவொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இணங்கப்பட்ட காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட மூலப்பொருள் அளவின் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உட்பிரிவொன்று இக் கேள்விக்காக மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது அதற்கிணங்க, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பாரிய இருப்புக்களின் பெறுவனவுகள் மீது அல்லது சந்தைக்கான தாரின் பெறுவனவுகள் மீது குறைந்த விலையில் தாரை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் காணப்படவில்லை.

### 5.3.6 மோட்டார் வாகன பயன்பாடு

-----------------------------------------------

அதிகாரசபைக்குச் சொந்தமான 07 மோட்டார் வாகனங்களிற்காக புதிய எஞ்சின்கள் பதிலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் பதிவுச் சான்றிதழ்களில் புதிய எஞ்சின் இலக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3.7 பயன்படுத்தும் உரித்தற்ற காணிகள்

-----------------------------------------------------------------

உடமை மாத்திரம் உரித்தான 10 காணிகளில் 10 ஏக்கர்கள், 01 றூட் மற்றும் 23.71 பேர்ச்கள் மொத்தப் பரப்பளவு சட்டரீதியான உரிமைத்துவத்தைக் கொண்டிராத நபர்களால் நீண்ட காலம் குடியிருக்கப்பட்டதுடன் அக் காணியை தெளிவுபடுத்துவதற்கு அதிகாரசபையின் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் அதிகாரசபையால் காணியை பயன்படுத்தும் உரிமை இழக்கப்பட்டிருந்தது.

## 5.4 வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

-------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஒக்தோபர் 06 இல் அரசாங்க புதினப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் மூலம் மேல் மாகாணத்தின் 136 வீதிகளிற்காக வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் 288 பஸ் உரிமையாளர்கள் கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்தனர். பெறுகைக் குழு விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த 171 நபர்களிற்கு வீதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானித்திருந்ததுடன் அவர்களில் 95 நபர்கள் அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்காக சமர்ப்பித்திருந்தனர். எவ்வாறாயினும் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த பஸ் உரிமையாளர்கள் காணப்பட்ட போது பெறுகை நடைமுறையிலிருந்து விலகி கேள்விப் பெறுமதிக்கு 10

சதவீத தண்டப்பணத்தை சேர்த்து 31 பஸ் உரிமையாளர்களிற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் தெல்கொட பஸ் நிலையம் மற்றும் 13 வியாபார கடைகள் என்பவற்றின் நிர்மாணங்கள் ரூபா 32,292,635 தொகை செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் விபாபாரக் கடைகள் 2018 பெப்ரவரி வரையிலும் வாடகைக்கு விடப்பட்டிருக்கவில்லை.

## 5.5 விவசாய சேவைகள் அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) விவசாய அமைச்சிடமிருந்து பெறப்பட்ட கட்டுநிதிகள் அதிகாரசபையின் பிரதான பெறுவனவு மூலமாக உள்ளது. மேற்படி மூலத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 5,642,440 தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகாரசபையின் வங்கிக் கணக்கில் விளைவற்றிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 19 பதவிகளாக காணப்பட்டதுடன் நிரந்தரப் பதவியணியினர் 07 ஆக காணப்பட்டது. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவியணியினர் 03 ஆக உள்ளதுடன் பதவியணியினரில் காணப்படுகின்ற 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டில் N 58222962047 ‘‘இலத்திரனியல் விவசாயத்திற்கு உட்பிரவேசிப்பதை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான இணைந்த நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல்’’ செயற்திட்டத்திற்காக ரூபா 500,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலத்திரனியல் விவசாயம் தொடர்பான அறிமுகம் 2017 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 06. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

#### 6.1.1 அரசாங்க மானியங்கள்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி வேலைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மானியங்கள் மற்றும் அம் மானியங்களின் பயன்பாடுகள் பின்வருமாறு உள்ளன.

| | மூலங்கள் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (i) | மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்கள் (PSDG) | 692.40 | 618.13 | 74.27 |
| (ii) | மாகாண அபிவிருத்தி மானியங்கள் (PDG) | 1,365.88 | 1,285.51 | 80.37 |
| (iii) | காரணிகளின் அடிப்படையிலான பிரதேச செயலாளர் பிரிவு நிகழ்ச்சித்திட்டம் (CBG) | 259.14 | 247.36 | 11.78 |
| (iv) | விசேட பிரிவு அபிவிருத்தி மானியங்கள் - சுகாதாரம் (HSDP) | 414.73 | 390.43 | 24.30 |
| (v) | விசேட பிரிவு அபிவிருத்தி மானியங்கள் - கல்வி (TSEP) | 135.46 | 135.38 | 0.08 |
| | **மொத்தம்** | **2,867.61** | **2,676.81** | **190.80** |

#### 6.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டங்கள்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழான செயற்திட்டங்களின் சார்பில் ரூபா 5,147.23 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 8,830 வேலை முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவ் வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு உள்ளது.

| | விபரம் | மொத்த வேலை முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த வேலைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா மில்லியன் |
| (i) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 8,504 | 4,831.77 |
| (ii) | 50 சதவீதத்தினை விட குறைவாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 57 | 128.11 |
| (iii) | 50 சதவீதத்தினை விட அதிகமாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 25 | 69.28 |
| (iv) | ஆரம்பிக்கப்படாதவை | 200 | 106.23 |
| (v) | சச்சரவுத் தன்மையான/ சிக்கலான நிலையின் கீழுள்ளவை | 44 | 11.84 |
| | **மொத்தம்** | **8,830** | **5,147.23** |

## 6.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹரகம பிரதேச செயலகம் 139 நீண்ட கால குத்தகை உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருந்த போதிலும் ஆண் சாரணர்களின் தலைமை அலுவலகத்திற்காக மாத்திரமே குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேல் மாகாணத்திலுள்ள மொத்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 1,414 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 94 சங்கங்கள் அல்லது 07 சதவீதம் செயற்பாடற்ற சங்கங்களாக காணப்பட்டன. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்ட அந்த செயற்பாடற்ற சங்கங்களை செயற்படுத்துவதற்கு முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவையில் மீள அமர்த்துவதற்கான மேன்முறையீடுகள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டளைகளிற்கு எதிரான மேன்முறையீடுகள் என்பவற்றிற்காக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பெறப்பட வேண்டிய அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாததனால் 41 மேன்முறையீடுகள் தீர்வு செய்யப்பட முடியாதவையாக காணப்பட்டன.

(ஈ) மாகாண கல்வி அமைச்சின் 02 உத்தியோகத்தர்களிற்காக செயற்பாட்டுக் குத்தகை முறையின் கீழ் கோரப்பட்ட இரண்டு உத்தியோகபூர்வ வாகனங்கள் பின்னர் நிராகரிக்கப்பட்டதனால் அவ் வாகனங்கள் குழாம் வாகனங்களாக பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. இதனால் ரூபா 2,010,660 செலவினம் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தது.

(உ) கல்வி அமைச்சின் N 77582864004 ஆம் இலக்கத்தைக் கொண்ட ''கொழும்பு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்குதல்'' செயற்திட்டம் தொடர்பாக விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 2,989,600 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய விளையாட்டு உபகரணங்கள் 2018 சனவரி வரையிலும் களஞ்சியங்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் 03 பிராந்திய அலுவலகங்களிற்கு ஆகக் கூடியது ரூபா 150,000 மாதாந்த உபகட்டுநிதியை வழங்குவதற்கு பிரதம செயலாளர் அங்கீகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 300,000 படி உபகட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(எ) வீதிகள் அமைச்சின் கிராமிய அபிவிருத்தி நியதிச்சட்ட நோக்கங்களின் பிரகாரம் 40 பிராந்திய அதிகாரசபைகளில் 38 பிராந்திய அதிகாரசபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களிற்கான மாவட்ட அதிகாரசபைகளை ஸ்தாபிக்க முடியாதிருந்தது. ஆகையால் மாகாண அதிகாரசபை மற்றும் கிராமிய அபிவிருத்தி நிதியம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கூட்டுறவுச் சங்கங்களிற்கு வழங்கப்பட வேண்டியிருந்த 350 கணக்காய்வு அறிக்கைகள் கூட்டுறவுத் திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கணக்காய்வு அறிக்கைகளை வழங்குவதிலுள்ள தாமதத்தினால் கூட்டுறவு நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டியிருந்த பங்களிப்புத் தொகையை தீர்மானிக்க முடியாதிருந்தது.

(ஐ) ஹொரண வலயக் கல்வி அலுவலகத்தின் கீழுள்ள 22 பாடசாலைகளின் 22 கட்டிடங்கள் நீண்ட காலமாக ஆபத்தான நிலையில் காணப்படுகின்றதென 2017 ஏப்ரலில் மாகாண கல்விப் பணிப்பாளரிற்கு அறிக்கையிடப்பட்டிருந்த

போதிலும் அக் கட்டிடங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபையால் ''அழகான கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம்'' இன் கீழ் கம்பஹா மாவட்டத்தின் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்திற்காக காணியொன்றை கொள்வனவு செய்வதற்காக 2014 திசெம்பரில் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரிற்கு வழங்கப்பட்ட ரூபா 1,858,320 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக 04 ஆண்டுகள் தொடக்கம் 06 ஆண்டுகள் வரையான காலவீச்சில் தீர்ப்பனவு செய்யப்படாத வேலைகளின் பிடித்துவைத்தல் பணம் ரூபா 846,088 தொகையாக காணப்பட்டது.

## 6.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கல்வி அமைச்சின் 2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுகளின் பிரகாரம் களஞ்சியங்களில் காணப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மீதி, விளையாட்டுப் பிரிவில் பேணப்பட்ட பொருட்பதிவேடு மற்றும் செயற்திட்டப் பொருட்களை பெற்று வழங்கும் பதிவேடுகளின் பிரகாரம் காணப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மீதிகள் என்பவற்றிற்கிடையே பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் காணப்பட்டன. பௌதீக மெய்மையாய்வின் பிரகாரம் விளையாட்டுப் பொருள் பற்றாக்குறைகளின் பெறுமதி ரூபா 3,209,285 தொகையானதுடன் களஞ்சியப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காத விளையாட்டுப் பொருட்களின் பெறுமதி ரூபா 200,510 தொகையாகும்.

(ஆ) மீரிகம ஆதார வைத்தியசாலையின் மதிப்பீடுகளின் பிரகாரம் பெறப்பட்ட மருந்துகள் பயன்படுத்தப்படாததன் காரணமாக ரூபா 139,356 தொகையான 11 வகையான மருந்துகள் காலாவதியாகியிருந்தன. இவ் மருந்துகளின் காலாவதியாகும் திகதிக்கு முன்னர் இவ் மருந்துகளை ஏனைய வைத்தியசாலைகளிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிரிபத்கொடை ஆதார வைத்தியசாலையில் 25 செல்சியஸ் மற்றும் 30 செல்சியஸ் இற்குக் குறைவான வெப்பநிலையில் பேணப்பட வேண்டிய 5 வகையான மருந்துகள் சாதாரண வெப்பநிலையில் வைக்கப்பட்டிருந்துடன் ரூபா 222,917 பெறுமதியான காலாவதியாகியிருந்த 22 வகையான மருந்துகள் மற்றும் ரூபா 207,605 பெறுமதியான 2015 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படுவதற்கு தடைசெய்யப்பட்டிருந்த 11 வகையான மருந்துகள் என்பன களஞ்சியங்களில் காணப்பட்டன.

(ஈ) கிரிபத்கொடை ஆதார வைத்தியசாலையில் ஊடுகதிர் பிரிவொன்றை (x-ray unit) ஸ்தாபிப்பதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 9,632,352 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் வரையிலும் அப் பிரிவின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீரிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மருந்துப்பொருள் களஞ்சியங்களில் 2017 திசெம்பரில் காலாவதியாகியிருந்த 24,000 விற்றமின் A (megadose) குழுசைகள் மற்றும் 189,000 குறைந்த தரத்திலான இரும்புக் குழுசைகள் (iron tablets) வைக்கப்பட்டிருந்தன.

## 6.4 வெளிப்படையான மோசடிகள்

-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 பெப்ரவரி 10 அல்லது அதற்கு அண்மைய திகதியிலிருந்து 2013 யூலை வரை அல்லது அத் திகதிக்கு அண்மைய காலப்பகுதியொன்று வரை மினுவாங்கொட பிரதேச செயலகத்தால் பெறப்பட்டு செலுத்தப்பட்டிருக்காத பொதுசன உதவித் தொகை ரூபா 1,441,440 அல்லது அதற்கு அண்மைய தொகையொன்று அரசாங்க கணக்குகளில் வைப்புச் செய்யப்படாமல் தவறான பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பாக 2013 ஆம் ஆண்டிலிருந்து நீதிமன்ற நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி வரையிலும் அந் நடவடிக்கைகள் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 915,786 தொகையான மஹர பிரதேச செயலகத்தின் மாகாண சபை வருமானம் 2014 யூலையில் காணாமல் போயிருந்த போதிலும் 2018 மே வரையிலும் பொறுப்பான தரப்பினர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்வி அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்ட 2017 செப்தெம்பர் 22 இல் நடைபெற்ற 43 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்காக பங்குபற்றிய விளையாட்டு வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 673 சோடிச் சப்பாத்துக்கள் மற்றும் 556 பிரயாணப் பைகள் மற்றும் உத்தியோகத்தர்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட 09 ரீசேட்கள் (வெட்லுக்) மற்றும் 09 வொட்டம்கள் (bottoms) மற்றும் விளையாட்டு வீரர்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட 35 ரீசேட்கள் மற்றும் வொட்டம்கள் மற்றும் 39 ஜக்கெட்கள் மற்றும் 124 கொரக்கொட்டைல் வகை ரீசேட்கள் என்பன 2018 சனவரி 27 வரையிலும் களஞ்சியங்களில் காணப்பட்டன.

(ஆ) 04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக பயனாளிகளிற்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 6,424,578 செலவிட்டு 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 4,801 செயற்திட்டப் பொருட்கள் பகிர்ந்தளிகப்படாமல் விளைவற்றிருந்தன.

(இ) மேல் மாகாணத்தின் குறைந்த வருமானத்தையுடைய குடும்பங்களில் கல்வியை பெறுகின்ற சிறுவர்களிற்கான நிவாரணமாக ஒரு சோடி சப்பாத்துக்களை வழங்குகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மினுவாங்கொட பிரதேச சபையின் நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 189,920 தொகை செலவிடப்பட்டு 2017 சனவரி 31 இல் நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்திற்கு 216 மாணவர்களிற்காக 216 சோடிச் சப்பாத்துக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 நவம்பர் 15 வரையிலும் அவை சிறுவர்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. முறையாக சப்பாத்துக்களின் தேவைப்பாட்டை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் பாடசாலையில் பயன்படுத்தப்பட்டிருக்காத 90 சோடிச் சப்பாத்துக்களும் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாடுகள் தொடர்பாக ரூபா 2,960,149 செலவிட்டு 2014 ஆம் ஆண்டில் பிம்புர ஆதார வைத்தியசாலையில் அரசாங்க ஒசுசல ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 2015 ஏப்ரல் 02 இல் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 சனவரி வரையிலும் ஒசுசல ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 பெப்ரவரியில் ஹொரண ஆதார வைத்தியசாலையால் பெறப்பட்டிருந்த ரூபா 3,303,403 பெறுமதியான உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் ரூபா 943,800 பெறுமதியான உபகரணம் சமையலறைக்கு தேவைப்பட்டிருக்கவில்லை.

## 6.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் களுத்துறை மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிற்காக ரூபா 54,750,440 பெறுமதியான 28 ஜெனரேட்டர்களை கொள்வனவு செய்த போது அவற்றில் 23 ஜெனரேட்டர்களிற்காக ரூபா 2,567,440 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான 06 மோட்டார் வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 240,525 தொகையான நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) களுத்துறை மாவட்டத்தின் 17 வைத்தியசாலைகளில் துணிகளை சலவை செய்வதற்கான ஒப்பந்தம் 06 ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்த விலையை விட ஆகக் கூடிய விலையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,668,480 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 6.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

---------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதுகம வலயத்திலுள்ள 03 பாடசாலைகளில் ரூபா 11,856,178 பெறுமதியான கட்டிடங்களின் நிர்மாணத்தை ஆரம்பித்ததிலிருந்து சில ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் நெபட வைத்தியசாலையில் சமையலறை மற்றும் ஓய்வு அறை என்பவற்றின் நிர்மாணத்திற்காக ரூபா 7,589,084 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின் சுவர்களில் வெடிப்புக்களும் கூரையிலிருந்து தண்ணீர் கசிந்து ஒழுகுதலும் காணப்பட்டன.

**6.8 தாமதமான செயற்திட்டங்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ஒரே கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா 9,345,000 தொகையான 12 செயற்திட்டங்களை வழங்குவதற்கு வீதிகள் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. அவ் 12 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் நீண்ட கால தாமதமொன்று அவதானிக்கப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் வேலை செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து 04 மாதங்கள் தொடக்கம் 08 மாதங்கள் வரையான வீச்சிலான தாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிட்டம்புவ சங்கபோதி மஹா வித்தியாலயத்தின் 3 மாடிக் கட்டிடத்தின் அடித்தளம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் தள மட்டம் வரை கொங்கிறீட் அடுக்குகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடத்தின கட்டமைப்பு நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக தற்போது சிதைவடைந்திருந்தன.

**6.9 முறையாக கையேற்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேசத்தின் 3 முக்கிய நன்கொடையாளர்களின் நன்கொடையாக பெறப்பட்டு 1947 ஆம் ஆண்டில் வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீரிகம ஆதார வைத்தியசாலையின் காணிக்கான உரித்துறுதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1948 ஆம் ஆண்டில் கிரிபத்கொடை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பு சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு அண்ணளவாக 70 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் பிரதேசத்தின் முக்கிய நன்கொடையாளரொருவரின் நன்கொடையாக இருந்த வைத்தியசாலைக் காணி மூலத் திட்டங்களின் பிரகாரம் 2.1437 ஹெக்டெயர்கள் பரப்பளவை காணி கொண்டிருந்த போதிலும் இக் காணி தொடர்பாக முறையாக உரித்துறுதி மாற்றப்படுதல் வைத்தியசாலையில் காணப்படவில்லை.

(இ) கம்பஹா கல்வி வலயத்தில் 16 பாடசாலைகளின் காணிகள் கையளிக்கப்படாமை, 16 பாடசாலைகளின் கையளிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் காணப்படாமை, 02 பாடசாலைகளின் கையளிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, முறையாக கையளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட 106 பாடசாலைகளிற்கான எழுத்துமூல சான்று சமர்ப்பிக்கப்படாமை போன்ற சில குறைபாடுகள் காணப்பட்டன.

(ஈ) கம்பஹா கல்வி வலயத்தின் பாடசாலைகளில் முறையாக காணிகள் கையேற்கப்படாத போதிலும் காணிகள் அளவீடு செய்யப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்ட 11 பாடசாலைகள், முறையாக கையேற்கப்பட்டிருந்த போதிலும் காணிகள் அளவீடு செய்யப்படாத 43 பாடசாலைகள், கையேற்று காணி அளவீடு செய்யப்படாத 13 பாடசாலைகள், பாடசாலைக் காணிகளின் ஒரு பகுதி மாத்திரம் அளவீடு செய்யப்பட்ட 4 பாடசாலைகள் மற்றும் பாடசாலை காணி அளவீடு செய்யப்பட்டதற்கான தகவல்கள் காணப்படாத 19 பாடசாலைகள் காணப்படுகின்றமை பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(உ) நீர்கொழும்பு கல்வி வலயத்தின் 33 பாடசாலைகளிற்குச் சொந்தமான காணிகள் முறையாக கையேற்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் காணப்படாததுடன் 50 பாடசாலைகளிற்குச் சொந்தமான காணிகள் முறையாக கையேற்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் காணப்படவில்லை.

## 6.10 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள்/ வெளி நபர்களிற்குச் சொந்தமான வளங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 1 ஏக்கர் 03 றூட்கள் மற்றும் 33 பேர்ச்கள் பரப்பளவான காணியொன்றை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் 1974 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 30 ஆண்டு குத்தகைக் காலப்பகுதி கடந்திருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையொன்றில்லாமல் இஹல மடம்பெல்ல புடைவைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கத்தால் காணியின் உடமை அனுபவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பியகம பிரதேச செயலாளரிற்குச் சொந்தமான 6.1 பேர்ச்கள் பரப்பளவான காணியொன்று ஏறத்தாழ 50 ஆண்டுகள் காலப்பகுதியிலிருந்து

சியம்பலாபேவத்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை நடாத்துவதற்காக எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் மீதான சட்டரீதியான அதிகாரம் பிரதேச செயலாளரால் மாற்றப்பட்டிருக்கவில்லை.

## 6.11 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 6.11.1 மாகாண சபை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பதவியணியினர் (சுகாதாரம் மற்றும் கல்வி பதவியணியினர் தவிர)

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | அமையம்/ பதிலீடு/ ஒப்பந்தம்/ தற்காலிகம் | |
| சிரேஷ்ட | 963 | 691 | 25 | 272 |
| மூன்றாம் | 424 | 285 | 04 | 139 |
| இரண்டாம் | 4,424 | 3,695 | 17 | 729 |
| ஆரம்ப | 1,678 | 1,476 | 04 | 202 |
| ஒப்பந்தம் | 16 | - | 04 | 12 |
| தற்காலிகம் | 14 | - | 11 | 03 |
| **மொத்தம்** | **7,519** | **6,147** | **65** | **1,357** |

### 6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் |
|---|---|---|---|
| அதிபர்கள் | 2,411 | 1,837 | 574 |
| ஆசிரியர்கள் | 35,147 | 34,254 | 893 |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவிப் பதவியணியினர் | 4,487 | 3,435 | 1,052 |
| **மொத்தம்** | **42,045** | **39,526** | **2,519** |

(அ) நீர்கொழும்பு கல்வி வலயத்தின் விசேட கல்வி சிறுவர் வளங்கள் அபிவிருத்திப் பிரிவிற்காக மாணவர் விகிதத்தின் பிரகாரம் ஆசிரியர்கள் போதியளவில் இருக்கவில்லை. 18 கல்விப் பிரிவுகளிற்குரிய 176 மாணவர்களிற்காக 40 ஆசிரியர்கள் காணப்பட வேண்டிய போதிலும் 2018 சனவரி வரை 21 ஆசிரியர்கள் மாத்திரமே சேவையிலீடுபட்டிருந்தனர்.

(ஆ) ஹொரண கல்வி வலயத்தின் பாடசாலைப் பதவியணிப் பதவிகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 159 ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் வருடக் கணக்காக சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) ஹொரண கல்வி வலயத்திற்குரிய 03 பிரதி அதிபர் பதவிகள் மற்றும் 24 உதவி அதிபர் பதவிகள் மேலதிகமாக காணப்படுகின்றன.

### 6.11.3 சுகாதாரப் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் எண்ணிக்கை | மிகையாகவுள்ள பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | அமையம்/ பதிலீடு/ ஒப்பந்தம்/ தற்காலிகம் | | |
| மருத்துவர் | 2,049 | 2,079 | - | - | 30 |
| தாதிமார் | 3,266 | 3,145 | 10 | 121 | - |
| உதவிப் பதவியணியினர் | 4,256 | 3,227 | 51 | 1,029 | - |
| சிற்றூழியர்கள் | 3,511 | 3,220 | 78 | 291 | - |
| **மொத்தம்** | **13,082** | **11,671** | **139** | **1,441** | **30** |

ஹொரண ஆதார வைத்தியசாலையில் 21 பதவிகளில் 80 உத்தியோகத்தர்களிற்கான வெற்றிடங்களும் 06 பதவிகளில் 17 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டன.

### 6.11.4 உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | அமையம்/ பதிலீடு/ ஒப்பந்தம்/ தற்காலிகம் | |
| சிரேஷ்ட | 568 | 386 | 36 | 182 |
| மூன்றாம் | 243 | 127 | 03 | 116 |
| இரண்டாம் | 6,153 | 4,612 | 41 | 1,541 |
| ஆரம்ப | 14,457 | 11,930 | 982 | 2,527 |
| ஒப்பந்தம் | 22 | - | 12 | 10 |
| **மொத்தம்** | **21,443** | **17,055** | **1,074** | **4,376** |

## 6.11.5 நியதிச்சட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் பதவியணியினர்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தரம் | அமையம்/ பதிலீடு/ ஒப்பந்தம்/ தற்காலிகம் | |
| சிரேஷ்ட | 76 | 60 | 02 | 16 |
| மூன்றாம் | 99 | 82 | 03 | 17 |
| இரண்டாம் | 495 | 412 | 27 | 83 |
| ஆரம்ப | 641 | 623 | 07 | 18 |
| ஒப்பந்தம் | 02 | - | 01 | 01 |
| **மொத்தம்** | **1,313** | **1,177** | **40** | **135** |

## 6.12 உள்ளூராட்சி அதிகாரசபை விவகாரங்கள் மீதான மேற்பார்வை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டியலின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை மாகாண சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகளின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கணக்குகள் மீது கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயம் மற்றும் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | கணக்காய்வு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக் கூற்றுக்கள்) எண்ணிக்கை | கருத்துரிமை மறுப்பு அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக் கூற்றுக்கள்) எண்ணிக்கை | பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக் கூற்றுக்கள்) எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013 | 48 | 04 | 25 |
| 2014 | 48 | 06 | 02 |
| 2015 | 48 | 03 | 01 |
| 2016 | 48 | - | 02 |
| 2017 | 48 | 01 | - |

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 48 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிலுவை வருமானங்கள் ரூபா 8,410,180,536 தொகை ஆகும்.

(இ) 06 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்களிற்கு/ ஏனைய நபர்களிற்கு எதிராக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்பட்ட 21 மிகைக்கட்டணங்கள் தொர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகைக்கட்டணங்களின் பெறுமதி ரூபா 31,794,735 தொகை ஆகும்.

(ஈ) உள்ளூராட்சி அதிகாரசபைகளில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக 2018 யூலை 31 வரை 12 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்ட 75 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 07. கணக்களிப்பெறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

விடய இலக்கம் 10903 காசு, முத்திரைகள் மற்றும் அவ்வாறான நிதிப் பெறுமதிகளின் இழப்புக்களை கணக்கீடு செய்வதற்கான முற்பணக் கணக்கு நடவடிக்கையின் கீழ் 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 915,786 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 7.2 ஆண்டறிக்கைகளை சபையில் முன்வைத்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது மேல் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் மாகாண சபைக்கு முன்வைக்கப்படுதல் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | அறிக்கை முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2012 | 2014 ஆகஸ்ட் 27 | 2015 சனவரி 20 |
| 2013 | 2014 திசெம்பர் 31 | 2015 யூன் 13 |
| 2014 | 2015 செப்தெம்பர் 18 | 2016 மே 03 |
| 2015 | 2016 ஆகஸ்ட் 16 | 2017 பெப்ரவரி 07 |
| 2016 | 2017 நவம்பர் 01 | 2018 பெப்ரவரி 19 |

## 7.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பஹா பொதுச் சுகாதார பரிசோதகரின் காலாண்டு ரீதியான மேற்பார்வை அறிக்கைகளின் பிரகாரம் கம்பஹா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 27,925 வீடுகளில் 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மலசலகூடமெதுவும் இல்லாமல் 260 வீடுகள் காணப்பட்டதுடன் மலசலகூடங்களுடன் துப்பரவின்றி 417 வீடுகள் காணப்பட்டன. மிகவும் ஆரோக்கியமான வீட்டு அலகுகளாக அவ் வீட்டு அலகுகளை மாற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டுமென எதிர்பாக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பஹா மாவட்டத்திலுள்ள 27,925 பதிவு செய்யப்பட்ட வீடுகளில் 2,733 வீடுகளின் நீர் கிணறுகள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டன.

(இ) கம்பஹா மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 29 வெதுப்பகங்களில் 4 வெதுப்பகங்கள், பதிவு செய்யப்பட்ட 65 உணவகம்/ ஹோட்டல்களில் 03, பதிவு செய்யப்பட்ட 98 வியாபாரக் கடைகளில் 10 தேநீர் மற்றும் கோப்பி வியாபாரக் கடைகள்

மற்றும் 183 சில்லறை வியாபாரக் கடைகளில் 6 கடைகள் திருப்தியற்ற நிலையில் காணப்பட்டன.

(ஈ) பொதுச் சுகாதார பரிசோதகரின் மேற்பார்வை அறிக்கையின் பிரகாரம் மீரிகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரதேசத்தில் போதியளவு தண்ணீர் வசதிகளைக் கொண்டிருக்காத பாடசாலைகளின் எண்ணிக்கை 6 ஆக காணப்பட்டதுடன் போதியளவு மலசலகூட வசதிகளைக் கொண்டிருக்காத பாடசாலைகளின் எண்ணிக்கை 6 ஆக காணப்பட்டது. எவ்வாறாயினும் இது தொடர்பாக கல்வி அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை.

## 08. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) வருமான முகாமைத்துவம் | மீண்டெழும் வருமானங்களையும் நிலுவை வருமானங்களையும் சேகரித்தல் பலவீனமாகக் காணப்படுதல். |
| (ஆ) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை | நிலுவை வருமானங்களும் அறவிடப்படாத மிகைக்கட்டணங்களும் காணப்படுதல். |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | கல்வி மற்றும் சுகாதாரப் பதவியணியினரில் வெற்றிடங்கள் காணப்படுதல். |
| (உ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) பாடசாலைகளில் அரைகுறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்கள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத உபகரணங்கள் என்பன காணப்படுதல்.<br>(ii) வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் காலாவதியான மருந்துகள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத உபகரணங்கள் என்பன காணப்படுதல். |